1972 ஆகஸ்ட் 25]

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) இக்கோரிக்கை பரிசீலனையில் உள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, கிராமப் பஞ்சாயத்தை நகரப் பஞ்சாயத்தாக மாற்றுவதற்கு என்னென்ன தகுதிகள் வேண்டுமென்று அரசு விதி வகுத்திருக்கிறது என்பதை அறியலாமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:—தலைவரவர்களே, பேரூராட்சி மன்றமாக மாற்றியமைப்பதற்கு மக்கள் தொகை 5,000க்குக் குறைவாக இருத்தல் கூடாது; ஆண்டு வருமானம் ரூ. 10,000க்கு அதிகமாக இருத்தல் வேண்டும், அந்தப் பகுதி நகர அம்சம் பொருந்தியதாக இருத்தல் வேண்டும். மேலும் பேரூராட்சியாக மாற்றியமைப்பது கிராம வளர்ச்சி இயக்குநரின் விருப்பத்திற்கு உட்பட்டதாகும். பேரூராட்சி மன்றமாக ஆனதற்குப்பிறகு பொருளாதார நிலை மற்றவைகளெல்லாம் வளர்ச்சித் திட்டங்களுக்கு ஏற்ற வழியில் அமையுமா என்று பார்த்து இவைகளுக்கெல்லாம் இசைவு தரக்கூடிய சூழ்நிலை அமைந்தால் அதை யொட்டி பேரூராட்சி மன்றமாக்குவதற்கு அனுமதிக்கப்படுகிறது.

* 334 Q.—THIRU R. R. MUNUSWAMY : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state :—

(*a*) whether there are proposals under the consideration of the Government to convert Madurantakam into a Municipality ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:—(a) ஆம்.

(b) மதுராந்தகம் பேரூராட்சியை நகராட்சியாக மாற்ற முதலில் உத்தேசிக்கப்பட்டது. இப்போழுது உத்தேசிக்கப்பட்டுள்ள நகராட்சியோடு அதைச் சார்ந்த வேறு சில பகுதிகளை சேர்ப்பது பற்றி அரசு கவனித்து வருகிறது.

திரு. கே. ஏ. வகாப்:—தலைவரவர்களே, இப்படி பேரூராட்சியை நகராட்சியாக மாற்ற எந்த அடிப்படை மேற்கொள்ளப்படுகிறது? சில பேரூராட்சிகள் தாங்கள் விரும்பாத போதுகூட அவைகள் நகராட்சியாக மாற்றப் பட்டு விடுகிறது. நகராட்சியாவதற்கு பேரூராட்சியில் தீர்மானம் ஏதாவது தேவைப்படுகிறதா? அல்லது அரசு அறிவிக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :—தலைவரவர்களே, ஒரு பேரூராட்சி நகராட்சியாக மாற்றப்பட 20,000 மக்களுக்கு மேல் இருக்க வேண்டும். அதன் வருமானம் ஒரு இலட்சம் ரூபாய்க்கு மேல் இருக்க

வேண்டும். அப்படியிருந்தால் நகராட்சியாக மாற்றக்கூடிய செயற்குறிப்பு இருக்கிறது. அந்தப் பேரூராட்சியின் தீர்மானம் எதிர்பார்க்கப்படுகிறது. சில யிடங்களில் வருமானமும் நான்கைந்து லட்சமாகி, மக்கள் தொகையும் 40,000 அல்லது 50,000 என்று ஆகியும் மாற்றுமல் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட இடங்களில் நாமே வற்புறுத்தி நகராட்சியாக ஆனுல்தான் நகரத்திற்குரிய வசதிகளும், வாய்ப்புகளும் செய்து தர முடியும், எனவே அதை நகராட்சி யாக மாற்றும்படி நாமே வற்புறுத்த வேண்டுமென்ற கட்டம் ஏற்படும். அதுவரையில் அவர்களுடைய விருப்பம்தான் கேட்டறியப்படுகிறது.

•

Poultry farms for Sevilimedu Panchayat.

*335. Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state:

(*a*) whether it is a fact that a special project for poultry production is to be inaugurated at Sevilimedu in Kanchipuram; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த செவிலிமேடு ஊராட்சியில் 20 கோழிப் பண்ணைகள் 10–11–1971 அன்று ஏழை மக்களின் நன்மைக்காக முன்னேடி திட்டமாக துவக்கப்பட்டுள்ளது.

(இ) இத்திட்டத்தின் கீழ் பயன் அடைபவர்கள் இருபது பேர் ஒரு குழுவினால் தேர்ந்தெடுக்கப்பட்டனர். காஞ்சிபுரம் இந்தியன் வங்கி இத் திட்டத்திற்கு ரூபாய் 16,000 கடனுக முன் பணம் கொடுத்துள்ளது. தேர்தெடுக்கப்பட்ட ஒவ்வொருவருக்கும் கடனுக ரூபாய் 800 (ரூபாய் எண்ணூறு) அளிக்கப்பட்டுள்ளது. இக்கடனை 12 மாத தவணையில் திருப்பிக் கொடுக்க வேண்டும். இது தவிர ஒவ்வொருவருக்கும் கால்நடை மானிய திட்டத்தின் கீழ் ஊராட்சி ஒன்றியத்தால் ரூபாய், 100 மானியமாக அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினுல் உற்பத்தியும் மற்றும் நிலமும் கிடைக்கும்.

திரு. என். டென்னிஸ்: தலைவர் அவர்களே, இதற்கு மத்திய அரசின் மானியம் ஏதாவது வழங்கப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, மத்திய அரசினுடைய மானியம் தரப்படவில்லை.

திரு. கா. வேழவேந்தன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த செவிலி மேடுத் திட்டம் ஒரு சிறந்த வெற்றிகரமான திட்டமாக இருக்கிறது. ஆகவே குறைந்த பட்சம் செங்கற்பட்டு மாவட்டத்திலே ஒவ்வொரு ஒன்றி யத்திலும் ஒரு இடத்திலாவது இது போன்ற சிறப்புத் திட்டங்கள் அமைக்கும் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?